**<u>மன்றப் பொருள்</u>**

2021ம் ஆண்டு ஜூன் 30.06.2021ம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற சாதாரக்கூட்டம் பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு. ஜெ.இரவி,**
**தனி அலுவலர்**

1. ஆணையர் (பொ) அவர்களின் ஜூன் 2021ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

2. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 25 படைவீட்டம்மன் கோவில் தெருவில் உள்ள ஏ.வி.சி. பூங்காவில் உள்ள Entrance Gate அமைத்தல் மற்றும் சமுதாக்கூட கட்டிடத்திற்கு பராமரிப்பு மற்றும் புனரமைப்பு செய்து புதுப்பிக்க உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
   2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

   **கோ.எண். 1084 / இ1 / 2021**

3. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட காந்தி ரோடு சக்தி ஐ.டி.ஐ சந்திப்பில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும் மற்றும் அச்சாலையில் உள்ள பள்ளி அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறுபாலம் பழுதடைந்து அதன் வழியாக மழைநீர் வெளியேற இயலாத நிலையில் இருப்பதால் பிரதான சாலையில் மழைநீர் தேங்கி போக்குவரத்திற்கும் பொதுமக்களின் சுகாதார சீர்கேடும் ஏற்படுவதாக பொதுமக்களிடம் இருந்து புகார்கள் வந்ததன் அடிப்படையில் மேற்கண்ட சக்தி ஐ,டி.ஐ சந்திப்பு மற்றும் பள்ளியின் அருகாமையில் உள்ள சிறுபாலங்கள் அமைக்க உத்தேச செலவினம் ரூ.4.70 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
   2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

   **கோ.எண். 1265 / இ1 / 2021**

4. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வரையுள்ள வார்டுகளில் உள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்மூழ்கி மோட்டார்கள், பல வகைப்பட்ட பி.வி.சி. பைப், ஜி.ஐ. பைப்கள், யு.ஜி. கேபிள்கள். மின் மோட்டார் கேபிள் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல் பணிக்கும், மேலும் கோடை காலங்களில் ஏற்படும் வறட்சியை முன்னிட்டு பொதுமக்களுக்கு சீரான பாதுகாப்பான குடிநீர் தங்கு தடையின்றி வழங்கிடவும், 2021–22ம் ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்தை மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
   2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

   **கோ.எண். 1266 / இ1 / 2021**

5. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வரையுள்ள பொதுமக்களுக்கு பல்வேறு கொள்ளளவுள்ள 18 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் அத்தியாவசிய பணிக்கு போதிய பணியாளர்கள் (Tank Operators) இல்லாததால் இந்நகராட்சி மூலம் காலை மற்றும் மாலை இருவேளை குடிநீர் விநியோகம் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி 2021–22ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்தும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையிலும் குடிநீர் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மனித சக்திகள் மூலம் பணி செய்ய ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோ.எண். 1267 / இ1 / 2021**

6. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கடலூர்–சித்தூர் சாலை மற்றும் கும்பகோணம் சாலைகளில் உள்ள Centre Median–ல் சோடியம் ஆவி விளக்குகள் நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்கு ஏற்படும் மாதாந்திர பராமரிப்புத் தொகையை குறைக்கும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேரடி அறிவுறுத்தலின் பேரில் மேற்கண்ட சோடியம் ஆவி விளக்குகளை LED விளக்குகளாக மாற்றியமைக்க ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோ.எண். 1268 / இ1 / 2021**

7. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 26–ல் உள்ள சொள்ளை சபாபதி தெரு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுபாலமானது மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. மேலும், இப்பாலத்தினை சீரமைத்து தருமாறு பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளதால், மேற்கண்ட இடத்தில் சிறுபாலம் அமைக்க உத்தேச செலவினம் ரூ.0.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

**கோ.எண். 1269 / இ1 / 2021**

8. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்டுள்ள இடங்களில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதாக பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. அதனை தொடர்ந்து பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.
   1. வார்டு எண்.12, செட்டிப்பட்டறை காலனியில் இருந்து வார்டு எண். 11, அசோக் நகருக்கு பிரதான குடிநீர் குழாய் அமைத்து இணைப்பு வழங்குதல்.
   2. வார்டு எண். 32, இருளங்குப்பத்தில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் 15 எச்.பி. மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் புதியதாக அமைத்து OHT–க்கு உந்தும் பணி.
   3. வார்டு எண். 26, மணி நகர் உரக்கிடங்கில் உள்ள ஆழ்துளை கிணற்றில் 10 எச்.பி. மோட்டார் பொருத்தி குடிநீர் பிரதான குழாயில் இணைப்பு வழங்குதல்.

   மேலும், பண்ணுருட்டி நகராட்சி பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய்கள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.10,00,000/– தயாரிக்கப்பட்டுள்ளதை நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 1151 / இ2 / 2021**

9. தேர்தல் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 பண்ணுருட்டி சட்டமன்றத் தொகுதி, நகராட்சிகளில் உள்ள 70 எண்ணிக்கை கொண்ட வாக்குச்சாவடிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் ந.க.எண். 16/2021 நாள். 03.04.2021ன்படி மாற்றுத் திறனாளிகளுக்கு (நடக்க இயலாதவர்களுக்கும் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கும்) அவசர அவசியம் கருதி சக்கர நாற்காலிகள் ஜீவா பர்னிச்சர், சென்னை உரிமையாளர் திரு. டி.சுப்ரமணியன் அவர்களிடம் 20 எண்கள் கொண்ட நாற்காலிகள் ரூ.1,73,360/– வாங்கப்பட்டது. அத்தொகையினை நகராட்சி சட்டம் 1970 பிரிவு 15ன் செலவு செய்யப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 2311 / ஆ1 / 2021**

10. தேர்தல் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 பண்ணுருட்டி சட்டமன்றத் தொகுதி, நகராட்சிகளில் உள்ள 70 எண்ணிக்கை கொண்ட வாக்குச்சாவடிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் ந.க.எண். 16/2021 நாள். 03.04.2021ன்படி மாற்றுத் திறனாளிகளுக்கு (நடக்க இயலாதவர்களுக்கும் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கும்) அவசர அவசியம் கருதி சக்கர நாற்காலிகள் தேவா பார்மா பர்னிச்சர், செஞ்சி உரிமையாளர் திரு. பி.கிருபா அவர்களிடம் 10 எண்கள் கொண்ட நாற்காலிகள் ரூ.57792/– வாங்கப்பட்டது. அத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 2311 / ஆ1 / 2021**

11. பண்ணுருட்டி நகராட்சிக்கு 2021–2022–ம் ஆண்டிற்கு பண்ணுருட்டி நகராட்சிக்கு தேவையான A4 பேப்பர், Legal பேப்பர் மற்றும் அம்மா உணவக பயன்பாட்டிற்கு தேவையான அம்மாஉணவக டோக்கன் விழுப்புரம் டிஸ்ட்ரிக் பிரிண்டிங் மற்றும் ஸ்டேஷனரி கூட்டுறவு சொசைட்டி லிமிடெட், விழுப்புரம் வாங்க உத்தேச செலவு ரூ. 2.00 (இரண்டு லட்சம்)–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ளலாம்.

**கோ.எண். 1953 / பி2 / 2021**

இடம் : பண்ணுருட்டி நகராட்சி
நாள் : 30.06.2021

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி